(இ) 1973-ம் ஆண்டு நிலவுடைமைகள் (நிறைவேற்று நடவடிக்கைகளை நிறுத்திவைத்தல்) (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப்பேரவை சட்ட முன்வடிவு எண் 22/73)

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா: பேரவைத் தலைவரவர்களே—

"1973-ம் ஆண்டு நில உடைமைகள் (நிறைவேற்று நடவடிக்கைகளை நிறுத்தி வைத்தல்) (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு* (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 22/1973) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்று நான் முன்மொழிகிறேன்.

முன்னாள் திருவாங்கூர்-கொச்சி மாநிலத்திலிருந்து கன்னியாகுமரி மாவட்டமும் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த செங்கோட்டை வட்டமும் 1956-ம் ஆண்டில் இம்மாநிலத்திற்கு மாற்றப்பட்டபோது, 1950-ம் ஆண்டு நில உடைமைகள் (நிறைவேற்று நடவடிக்கைகளை நிறுத்தி வைத்தல்) சட்டம் (திருவாங்கூர்-கொச்சி சட்டம் 8/1950) அங்கு செயலில் இருந்தது. இச்சட்டம் இப்போது கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டுமே செயலில் உள்ளது.

ஒரு நில உடைமையின் சுவாதீனத்தை மீண்டும் பெறுவதற்கான ஒரு வழக்கில் பிறப்பித்த டிக்ரியை நிறைவேற்றுவது குறித்த நடவடிக்கைகள், அந்த நிலத்தின் சுவாதீனத்தை ஒப்படை செய்வதற்குச் சம்பந்தப்படுகிற, வரையில் அந்த நடவடிக்கைகளை நிறுத்தி வைக்க இச்சட்டம் வகை செய்கிறது.

1950-ம் ஆண்டு நில உடைமைகள் (நிறைவேற்று நடவடிக்கைகளை நிறுத்தி வைத்தல்) சட்டம் கன்னியாகுமரி மாவட்டத்திற்குப் பொருந்துகிற வரையில், அச்சட்டத்தின் செல்திறன் கால அளவு

---

*1973-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 10-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

1973 ஆகஸ்ட் 13] [திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா]

1973 செப்டம்பர் 24-ம் நாளன்று முடிவடையவிருக்கிறது. தமிழ்நாடு 1955-ம் ஆண்டு பயிரிடும் குத்தகைக்காரர்கள் பாதுகாப்புச் சட்டத்தையும், தமிழ்நாடு 1956-ம் ஆண்டு பயிரிடும் குத்தகைக்காரர்கள் (நியாய வாரம் செலுத்துதல்) சட்டத்தையும் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு நீட்டிக்க விழையும் தமிழ்நாடு 1972-ம் ஆண்டு பயிரிடு குத்தகைக்காரர்கள் பாதுகாப்பு, நியாய வாரம் செலுத்துதல் (கன்னியாகுமரி மாவட்டத்திற்கு நீட்டித்தல்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 26/1972) மாநிலச் சட்ட மன்றத்திலும் நிறைவேற்றப்பட்டு, அச்சட்ட வரைவிற்குக் குடியரசுத் தலைவரின் இசைவு எதிர்பார்க்கப்படுகிறது. இச்சட்ட முன்வடிவு 24—9—1973-க்குள் சட்டமாக இயற்றப்படுமென்று தோன்றவில்லை. எனவே, 1950-ம் ஆண்டு நில உடைமைகள் (நிறைவேற்று நடவடிக்கைகளை நிறுத்தி வைத்தல்) சட்டத்தின் செல்திறனை 25—9—1973 முதல் மேலும் **இரண்டாண்டுகளுக்கு நீட்டிக்கச் சட்டம் இயற்றவும், சட்ட** மன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு 26/1972) சட்டமாக இயற்றப்பட்ட பின்னர் மேற்குறிப்பிட்ட சட்டத்தை ரத்து செய்வது பற்றித் தனியாகப் பரிசீலிக்கவும் அரசு முடிவு செய்துள்ளது. இதனை ஏற்று நிறைவேற்றித் தருமாறு இப்பேரவையைக் கேட்டுக் கொள்கிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2, 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: 1973-ம் ஆண்டு நிலவுடைமைகள் (நிறைவேற்று நடவடிக்கைகளை நிறுத்தி வைத்தல்) (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப்பேரவை சட்ட முன்வடிவு எண் 22/73) சட்டமாக நிறைவேற்றப்படவேண்டும் என முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, சட்டமுன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.